Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஐப்பசி 04    (20-10-1993)    புதன்கிழமை    ஓசை 244

## புனர்வாழ்வு அமைச்சின் கப்பல் சேவை இம்மாதத்துடன் இடைநிறுத்தம்

யாழ். குடாநாட்டு கப்பல் சேவைக்கென புனர்வாழ்வு அமைச்சினால் இவ்வாண்டுக்கென ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்ததையடுத்து யாழ்ப்பாணத்திற்கான கப்பல் சேவையும் நிறுத்தப்படவுள்ளது. கொழும்பு, திருமலைப் பகுதிகளிலிருந்து குடாநாட்டிற்கான அத்தியாவசியப் பொருள்கள் கப்பல் மூலமாகவே அனுப்பிவைக்கப்படுவது தெரிந்ததே. இக் கப்பல் சேவை நிறுத்தப்படுகின்றபோதிலும் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பிலிருப்பதாக செயலகவட்டாரங்கள் தெரிவித்தன. ஆயினும் இம்மாத இறுதிவரை கப்பல் சேவை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த ஆண்டுக்கான நிதி டிசம்பர் மாதமளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டதும் ஜனவரி முதல் கப்பல் சேவை வழமைபோல் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது இதே வேளை தனியாருக்கான கப்பல் சேவை தொடர்ந்து (4ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று ராட்சத ஹெலிகப்டர்கள்

# அரசு கொள்வனவு செய்யமுடிவு!

### கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் மலிவு விலையில் ஆயுதங்கள்

(கொழும்பு)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து பல நவீன ஆயுத தளபாடங்களை மலிவு விலையில் கொள்வனவு செய்ய சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ் ஆயுதக் கொள்வனவில் நவீன ரக ராட்சத ஹெலிகப்டர்களிலிருந்து அதிவேக பீரங்கிப் படகுகள் வரை பெறப்படும் எனவும் தெரியவருகிறது. இதன் முதற்கட்டமாக எம். ஐ. 17 IV ரக இராணுவ போக்குவரத்துக்கு ஹெலிகப்டர்கள் மூன்று உடனடியாகப் பெறப்படவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

இது குறித்து கொழும்பில் சிறிலங்கா பாதுகாப்பு படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்;

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட நவீன ஹெலிகப்டர்களையும் இராணுவ உபகரணங்களையும் கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டின் இறுதியில் புதிய மூன்று எம். ஐ 17 IV ரக இராணுவ போக்குவரத்து ஹெலிகப்டர்கள் கொள்வனவு செய்யப்படும் என்றும் எதிர்காலத்தில் மேலும் கிழக்கு ஐரோப்பிய இராணுவ தளபாடங்கள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிதாக கொள்வனவு செய்யப்படவுள்ள பாரிய இராணுவ போக்குவரத்து இரட்டை என்ஜின் ஹெலிகப்டர்கள் தற்போது பல நாட்டு விமானப் படைகள் பயன்படுத்தும் பெரிய போக்குவரத்து இயந்திரம் எனக் கூறப்படுகிறது.

புதிதாக வரும் மூன்று எம். ஐ 17 IV ஹெலிகப்டர்களுடன் விமானப்படை பயன்படுத்தும் இந்த ரக ஹெலிகப்டர்களின் தொகை ஆறாக உயரும்.

ரஷ்யா மற்றும் முன்னாள் சோவியத்குடியரசுகள் உட்பட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கைத்துப்பாக்கியிலிருந்து கடற்படை படகுவரை குறைந்த விலையில் ஆயுதங்களை விற்க முன்வந்துள்ளன. இது சிறிலங்கா படைகளின் ஆயுத தேவையை பூர்த்திசெய்யும் என இராணுவ வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

### பட்டயினர் அழைப்பைத் தொடர்ந்து

## ராணுவ முகாமிற்கு சென்ற பெண் ஒருவாரமாகியும் திரும்பவில்லை

சிறிலங்கா இராணுவத்தினர் அறிவித்ததைத் தொடர்ந்து இராணுவ முகாமுக்குச் சென்ற யுவதி ஒருவர் பல நாட்களாகியும் இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2ஆம் திகதி மாலை 5மணியளவில் மட்டக்களப்பு கோப்பா வெளி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் பிரேமா என்ற யுவதியை முகாமிற்கு வருமாறு அறிவிப்பு ஒன்றைவிடுத்தனர்.

இவர்கள் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து அம்முகாமுக்குச் சென்ற மேற்படி பெண்ணே இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தொடர்பாக உறவினர் மேற்படி முகாமிற்குச் சென்று விசாரித்தபோது அப்படி எவரும் முகாமிற்கு வரவில்லை என இராணுவத்தினர் பதிலளித்தனராம்.

## தென்பகுதி தெருக்களில் இளைஞர்களின் சடலங்கள்

(கொழும்பு)

தென்னிலங்கையின் பல பாகங்களிலும் இனந்தெரியாத பல சடலங்கள் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இவை தொடர்பாக பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகவும் 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச் சடலங்களின் கண்கள் கட்டப்பட்டுள்ளதுடன், தலையில் துப்பாக்கிச்சூட்டு காயங்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது வேறுசில சடலங்கள் சிதைந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பல சடலங்கள் முகத்துவாரம், மீரியான, வெலிவேரியா, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும், இவ்வாறான சடலங்கள் மோட்டார் வாகனங்களில் வருவோரால் போடப்பட்டு வருவதாக அறியப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி அப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### கலந்துரையாடல்

1992 ஏப்பிரல் விசேட பரீட்சையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஒன்றியத்தின் கலந்துரையாடல் இன்று மாலை 3. 30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### மட்டு. மாவட்டத்தில் பத்து பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நான்கு முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் இரு கிராமங்களை அதிகாலையில் சுற்றிவளைத்து அக்கிராம பொதுமக்களை கைது செய்து முகாமகளுக்குக் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 9ஆம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் மட்டக்களப்பு மரப்பாலம், அடிச்சல், கோப்பாவெளி 78 ஆம் கிராமம் ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய சிறி

## கிளாலியில் பின்வாங்கல் அரசியல் மூல உபாயமாம்

(கொழும்பு)

''கிளாலியிலிருந்து இராணுவம் பின்வாங்கியமை அரசி... பட்ட முடிவே'' என்று கூறியுள்ளார். இராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா சண்டே ரைம்ஸ் ... ளார். அவர் தனது இப்பேட்டியில் இராணுவம்குறித்துதென்னிலங்கை பத்திரிகைகள் எழுதும் விமர்சனங்களுக்கு கடும்

### சிங்கள இளைஞருக்கு புலிகளுடன் தொடர்பாம்

(கொழும்பு)

களனியைச் சேர்ந்த சிங்கள இளைஞர் ஒருவர் விடுதலைப் ... செய்யப்பட்டார். இவரது வீட்டிலிருந்து ரி- 56 துப்பாக்கி 27 ரவைகள், கைத்துப்பாக்கி

### முழுநேர ஆதரவாளர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும்

டும் எனவும் தெரியவருகிறது. இதன் முதற்கட்டமாக எப். ஐ. 17 IV ரக இராணுவ போக்கு வரத்துக்கு ஹெலிகப்டர்கள் மூன்று உடனடியாகப பெறப்படவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

இது குறித்து கொழும்பில் சிறிலங்கா பாதுகாப்பு படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்;

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட நவீன ஹெலிகப்டர்களையும் இராணுவ உபகரணங்களையும் கொள்வனவு செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டின் இறுதியில் புதிய மூன்று எம். ஐ 17 IV ரக இராணுவ போக்குவரத்து ஹெலிகப்டர்கள் கொள்வனவு செய்யப்படும் என்றும் எதிர் காலத்தில் மேலும் கிழக்கு ஐரோப்பிய இராணுவ தளபாடங்கள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிதாக கொள்வனவு செய்யப்படவுள்ள பாரிய இராணுவ போக்குவரத்து இரட்டை என்ஜின் ஹெலிகப்டர்கள் தற்போது பல நாட்டு விமானப் படைகள் பயன்படுத்தும் பெரிய போக்குவரத்து இயந்திரம் எனக் கூறப்படுகிறது. புதிதாக வரும் மூன்று எம். ஐ 17 IV ஹெலிகப்டர்களுடன் விமானப்படை பயன்படுத்தும் இந்த ரக ஹெலிகப்டர்களின் தொகை ஆறாக உயரும்.

ரஷ்யா மற்றும் முன்னாள் சோவியத் குடியரசுகள் உட்பட பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கைத்துப்பாக்கியிலிருந்து கடற்படை படகுவரை குறைந்த விலையில் ஆயுதங்களை விற்க முன்வந்துள்ளன. இது சிறிலங்கா படைகளின் ஆயுத தேவையை பூர்த்திசெய்யும் என இராணுவ வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

யாத பல சடலங்கள் கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இவை தொடர்

திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இச் சடலங்களின் கண்கள் கட்டப்பட்டுள்ளதுடன், தலையில் துப்பாக்கிச்சூட்டு காயங்கள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது வேறுசில சடலங்கள் சிதைந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும், இவ்வாறான சடலங்கள் மோட்டார் வாகனங்களில் வருவோரால் போடப்பட்டு வருவதாக அறியப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி அப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## கலந்துரையாடல்

1992 ஏப்பிரல் விசேட பரீட்சையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஒன்றியத்தின் கலந்துரையாடல் இன்று மாலை 3. 30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## மட்டு. மாவட்டத்தில் பத்து பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நான்கு முகாம்களிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் இரு கிராமங்களை அதிகாலையில் சுற்றிவளைத்து அக்கிராம பொதுமக்களை கைது செய்து முகாமகளுக்குக் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 9ஆம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் மட்டக்களபபு மரப்பாலம், அடிச்சல், கோப்பாவெளி 78 ஆம் கிராமம் ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய சிறி

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலியில் பின்வாங்கல் அரசியல் மூல உபாயமாம்

(கொழும்பு)

''கிளாலியிலிருந்து இராணுவம் பின்வாங்கியமை அரசியல் முலோபாயத்தை அமுலாக்குவதற்காக முழுமையாக இராணுவரீதியாக எடுக்கப்பட்ட முடிவே'' என்று கூறியுள்ளார். இராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தனது இப்பேட்டியில் இராணுவம்குறித்துதென்னிலங்கை பத்திரிகைகள் எழுதும் விமர்சனங்களுக்கு கடும் கண்டனங்களை வெளியிட்டார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள இளைஞருக்கு புலிகளுடன் தொடர்பாம்

(கொழும்பு)

களனியைச் சேர்ந்த சிங்கள இளைஞர் ஒருவர் விடுதலைப் புலிகளுடன்தொடர்பு கொண்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இவரது வீட்டிலிருந்து ரி- 56 துப்பாக்கி 27 ரவைகள், கைத்துப்பாக்கி என்பன பொலிசாரால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## முழுநேர ஆதரவாளர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து கடந்த 16ஆம் திகதி மட்டக்களப்பிலுள்ள பாவற்கொடிச் சேனையில் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த எட்வேட் மாஸ்ரர் (இருதயபுரம் மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## வெள்ளியன்று தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

'வாதுவ' கப்பலில் இம்முறை எடுத்து வரப்பட்ட 611 தபால் பொதிகள் நாளை இறக்கப்பட்டு நாளை மறுதினம் விநியோகிக்கப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

# சர்வதேச மத்தியஸ்தம் எதையும் ஏற்பதற்கில்லை

## -ரணில்

(வாஷிங்டன்)

சுமார் பத்தாண்டு காலத்திற்கும் மேல் நீடிக்கும் போரைத் தணிக்க சர்வதேச ரீதியிலான ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் சர்வதேச மத்தியஸ்தத்துடனான முயற்சிகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வாஷிங்டனில் தெரிவித்தார்.

அமெரிக்காவில் மேற்கொண்ட ஒருவார சுற்றுப் பயணத்தின் பின்னர் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு போதுமான வகையில் சிறிலங்காவின் ஜனநாயக கட்டமைப்பில் நீக்குப் போக்கு இருப்பதாகவும் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் தொடர்பாக அரசாங்கம் ஒளிவு மறைவு அற்ற தெளிவான கொள்கை ஒன்றையே பின்பற்றுவதாகக் குறிப்பிட்ட அவர் தற்போது தமது அரசாங்கத்திற்கு புலிகளுடன் எத்தகையதொடர்பும் இல்லையென்றும், அரசியலமைப்பின் கட்டமைப்பிற்கு உட்பட்ட வகையில் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளின் வாயிலான தீர்வு ஒன்றைக் காணும் யோசனையை தமது அரசு எதிர்க்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## இராணுவதளபதியைகொல்ல கொழும்பில் 'பஜ்ரோ' அணியாம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவைக்கொலை செய்ய விடுதலைப் புலிகள் அமைப்பின் 'பஜ்ரோ அணி' கொழும்பில் தங்கியிருப்பதாக 'லக்திவ' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்படைதளபதி கிளான்சி பர்னான்டோ காலிமுக திடலுக்கு அருகே கொலை செய்யப்பட்டது போன்று அதிக சக்தி வாய்ந்த குண்டை வாகனத்தில் பொருத்தி ராணுவத் தளபதியின் வாகனத்துடன் மோதுவது அல்லது அவருக்கு அருகே அதனை வெடிக்க வைப்பது என திட்டம் தீட்டப்பட்டுள்ளதாம் இதற்கான பயிற்சி தற்பொழுது 'பஜ்ரோ அணி'யினருக்கு கொழும்பில் வைத்து வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்கக)

## பிரச்சினைகளைத் தீர்க்க சிங்கள தலைவர்கள் விரும்பவில்லை

(லண்டன்)

''எல்லா சிங்கள அரசுகளும் ஒரே மாதிரியானவை தான் ஜெயவர்த்தனா, பண்டாரநாயக்கா, பிரேமதாசா அல்லது வேறு எவராயினும் இவர்களிடையே எந்த வித்தியாசமும் இல்லை. ஒவ்வொரு சிங்கள தலைவரும் தாம் பிரச்சினைகளை தீர்க்க விரும்புவதாக கூறுவர். ஆனால் அவர்கள் பிரச்சினையை தீர்க்க விரும்பவில்லை.'' இவ்வாறு அமைச்சர் தொண்டமான் லண்டனிலிருந்து வெளியாகும் தமிழ் நேஷன் செப்டம்பர்மாத சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதியால் தமி

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சியாளரைக் காக்க படையினர் உயிரிழப்பு

## பிரேமச்சந்திர ரணவீர குற்றச்சாட்டு

(கொழும்பு)

''அதிகாரத்தில்தொடர்ந்து இருக்கவிரும்பும் ஆட்சியாளர்களுக்காகவே இராணுவத்தினர் தமது உயிர்களை இழக்கின்றனர். நாட்டுக்காக அல்ல" இவ்வாறு மேல் மாகாண சபையின் உறுப்பினர் பிரேமச்சந்திர ரணவீர தெரிவித்துள்ளார்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போது உயிரிழந்த சிங்கப் படைப்பிரிவைச் சேர்ந்த ரி. ஏ. மானெல்ல புஸ்ப குமார என்பவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; ''அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்காகவே ஆட்சியாளர்கள் வடக்கு கிழக்கு யுத்தத்தை தொடர்ந்து நடத்துகின்றனர். யுத்தத்தில் இறக்கும் இராணுவத்தினரில் பெரும்பாலானவர்கள் கிராமப் புறங்களைச் சேர்ந்த வறிய இளைஞர்களே'' என்றார்.

இதேவேளை போர்முனையில் உயிரிழக்கும் படையினர் ஆட்சியாளர்களின் அதிகாரத்தை காப்பதற்காகவே உயிரிழப்பதாக ஒரு கருத்து வேகமாகப் பரவி வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

கிளாலியைப் படையினர் கைப்பற்றியதாக அறிவித்திருந்தபோதிலும் கிளாலிப் படகுச்சேவை தொடர்ந்து நடைபெறுவதாக வெளியான செய்தியை அடுத்து. சிங்கள மக்கள் மத்தியில் படைகள் மீதும் ஜனாதிபதி மீதும் வைத்திருந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுவிட்டதாக இடது

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க வில் இணையுமாறு அனுராவிற்கு அழைப்பு

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறியுள்ள அனுரா பண்டாரநாயக்காவை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் வந்திணையுமாறு அதன் பொதுச்செயலர் அமைச்சர், சிறிசேன கூரே அழைப்புவிடுத்துள்ளார்.

அனுரா ஐ.தே.க வில் இணைவதை ஜனாதிபதி விஜேதுங்காவும்கட்சியின் சகல மட்டத்தினரும் வரவேற்பர் எனவும் கூரே தெரிவித்தார்.

## வாந்திபேதி நோய்க்கு வயோதிப மாது பலி

(தொல்புரம்)

சுழிபுரம் சத்தியக் காடு இடம்பெயர்ந்தோர் முகாமில் வயோதிபமாது ஒருவர் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

காரைநகரைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாமில் வசித்துவந்த கணபதி சரசுவதி (62 வயது) என்பவரே நோய்வாய்ப்பட்ட நிலையில் சங்கானை அரசினர் வைத்திய சாலையிலிருந்து யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று அங்கு மரணமானார்.

இதேவேளை சுழிபுரம் பகுதியில் வயிற்றோட்ட நோய் வாய்ப்பட்ட எழுவர் தொல்புரம் பாணாவெட்டி அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதுபற்றி தெரிய வருவதாவது; சுழிபுரம் சத்தியக்காடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்போரில் மகனை இணைத்த தந்தையார்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கின்போது பெற்றோர் ஒருவர் தனது மகனை விடுதலைப் போராட்டத்தில் இணைத்தார்.

கடந்த 16ஆம் திகதி முல்லை மாவட்டம் நெடுங்கேணியில் நடைபெற்றபோர்க் கால கருத்தரங்கின் போதே

(4ஆம் பக்கம் பார்க்க)

**மீண்டும் போர் மேகம் சூழ்கிறது**

வான்பரப்பில் யுத்த விமானங்கள்
கடற்பரப்பில் பீரங்கிக் கப்பல்கள்
நிலப்பரப்பில் கவச வாகனங்கள்

**தமிழா எழு!**

எழுந்திடு இல்லையேல் பெரும்பழி
எதிரிக்கு வெட்டுவோம் புதைகுழி

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

துரை வீதி ஊடாக வல்லவன் வீதி - இணுவிலில் அமைந்திருக்கும் காணி - மூன்று பரப்பு பனை மரங்கள் பிரயோசனத்துடன் விற்பனைக்கு உண்டு. விலை மற்றும் தொடர்புகளுக்கு இ. பாலா -108, அரசடி றோட், கந்தர்மடம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(6324)

### பூபாலசிங்கம் புத்தகசாலை

உளவியலும், நவீன கற்பித்தலியலும் ஆக்கம் கலாநிதி சபா. ஜெயராசா வெளியீடு பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல். ஆக்கம்- பேராசிரியர் கா. சிவத்தம்பி விற்பனையாகிறது. பூபாசிங்கம் புத்தகசாலை.

(சி-7732)

### உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-7570)

### விற்பனையாகிறது

நவராத்திரியை முன்னிட்டு விற்பனையாகின்றது. நவராத்திரி தோத்திரப் பாமாலை வித்துவான் சி. குமாரசாமி B. A வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை விலை 20/- மட்டும்

(சி 7731)

### கால்நடைச் சந்தை

(வடமராட்சி)

புலோலியில் உள்ள கால்நடை வைத்தியர் பணிமனையில் எதிர்வரும் 23ஆந் திகதி கால்நடைச்சந்தை திறந்து வைக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8 மணி முதல் 1 மணி வரை இக் கால்நடைச்சந்தை செயற்படவுள்ளது. (யோ)

## தொடர்பு கொள்ளவும்

குரக்கனை கையிருப்பில் வைத்திருப்போர் அதனை விற்பனை செய்ய விரும்பின் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கொள்வனவு விலை:- தீட்டிய குரக்கன் 1 கிலோ 26/- மட்டுமே.

நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

1. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட வட்ட தொடர்பாளர் அலுவலகங்கள்.
2. உதயம் பல்பொருள் அங்காடி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
3. மதுரம் பாண் தயாரிப்பகம், பலாலி வீதி, உரும்பராய்.
4. காமதேனு விவசாய கால்நடைப் பண்ணை. வெள்ளை வீதி, சுன்னாகம்.

(சி 7737)

## சாவகச்சேரி பிரதேசசபை 1994-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1994ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 03-11-93-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 01-11-93-ம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரமான மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை ''விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்'' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை ''உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்னத்துக்கான கேள்வி என எழுதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 03-11-93-ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப்பணிமனையிலுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலம் கிடைக்கச் செய்யவும் கேள்விப்பத்திரங்கள் 05-11-93ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபைப் பணிமனையில்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை பிரேம்

(மரியதாஸன் கோகுலவாசன்)

மலர்வு: 12-08-1965 வீரச்சாவு: 20-10-1988


தியாகியே உன் தியாகம்
இத்தேசத்தை விடிய வைக்கும்
இது மெய்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
- குடும்பத்தினர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(6325)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேஷ்டி அழைப்பும்



## சுத்தம், சுகாதாரம் பேணும் நடவடிக்கையில் ஈடுபடவும்

– உள்ளூராட்சி ஆணையாளர்

(தொல்புரம்)

எமது மாவட்டம் எதிர்நோக்கி இருக்கின்ற பிரச்சினைகளுள் சுத்தம், சுகாதாரத்தைப் பேணி தற்போதைய சூழ்நிலையில் உயிர் பாதுகாப்பிற்கு உறுதுணையாக அனைத்துப் பணிகளிலும் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும், கடமையுணர்வுடனும் அனைவரும் செயல்பட முன்வர வேண்டும்.

இவ்வாறு கடந்த திங்கள் காலை வலிமேற்கு பிரதேச சபை சுழிபுரம் தலைமை அலுவலக மண்டபத்தில் சன சமூக நிலையங்களின் உறுப்பினர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள், பேக்கறி, சாப்பாட்டுக்கடை, தேநீர்க்கடை உரிமையாளர்கள், இடம் பெயர்ந்தோர் முகாம்களின் தலைவர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் மத்தியில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமை வகித்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் எமது சகல வளங்களையும் ஒடுக்கி, எம்மை அழிக்க அரசு திட்டம் தீட்டுகிறது. இந்த வகையில் அத்தியாவசிய மருந்துகள் இல்லை நாம் நடந்துசெல்ல சீரான பாதையில்லை, கல்வியில் ஒடுக்குமுறை இப்படி பல அடிப்படைப் பிரச்சினைகளை முன்னெடுக்க முடியாத அவலநிலை தோன்றியுள்ள இவ்வேளையில் மக்களுக்கும் நாட்டிற்கும் பயன்படும் வகையில் சகலரும் தத்தமது கடமைகளை செவ்வனே செய்ய முன்வர வேண்டும். இந்த அடிப்படையில் சுகாதாரம் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் பேணும்படி கேட்டுக் கொண்டார்.

அநேக உறுப்பினர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் வலி மேற்கு பிரதேச செயலரும், சங்கானை உதவி அரசாங்க அதிபருமான செல்வி ரூபினி கனகரத்தினம் அவர்களும் கலந்து கொண்டார். (41)

### யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

மேற்படி கூட்டம் 24-10-1993 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 11-00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1976ஆம் ஆண்டிலிருந்து கற்ற எமது மாணவிகள் அனைவரையும் இக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

–அதிபர்

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,
வதிரி, கரவெட்டி.

(5857)

### பரதநாட்டியம், வாய்ப்பாட்டு வகுப்புகள்

★ 6 வயதிற்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர் மற்றும் மகளிரும் அனுமதிக்கப்படுவர்.

ஆரம்பம்: 24-10-93
பி. ப. 3 மணி.
(விஜயதசமி அன்று)

## 1994-ம் ஆண்டிற்கான

# கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1994ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 03-11-93-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 01-11-93-ம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரமான மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை ''விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்'' என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை ''உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்னத்துக்கான கேள்வி என எழுதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 03-11-93-ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப்பணிமனையிலுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலம் கிடைக்கச் செய்யவும் கேள்விப்பத்திரங்கள் 05-11-93ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபைப் பணிமனையில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகம் கொடுக்கலாம்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் கொண்டு வருதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களைப் பெறத்தகுதியற்றவர் எனக்கருதப்படும் ஒருவருக்கு விசேட ஆணையாளரால் கேள்விப்பத்திரங்கள் வழங்காது விடப்படலாம். 1993ஆம் ஆண்டு அதற்கு முன்னர் குத்தகைப்பணத்தைச் செலுத்தாதவர்களுக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மாத்திரம் குத்தகையை ஏற்று நடாத்த அனுமதிக்கப்படுவர். ஆள்மாறாட்டம் எதுவும் செய்யப்படுமிடத்து குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்குண்டு. இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசசபை தலைமைப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளைப் பிற்போடவோ, இரத்துச்செய்யவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு கொள்களக் கட்டணம் அப்போதைய காலப்பகுதிக்கு அமைவாக செலுத்தப்படுதல் வேண்டும்.

## 1994 கேள்வி அறிவித்தல் அட்டவணை

| | குத்தகை விபரம் | ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| | **நுச்சாய் உபபணிமனை** | | | |
| 01. | கொடிகாமம் பொதுச்சந்தை | 1,82,000 | 500 | 200 |
| 02, | கொடிகாமம் சந். மா. இறை. கடை | 40,000 | 100 | 100 |
| 03. | கொடிகாமம் சந் ஆட். இறை. கடை | 3,000 | 100 | 100 |
| 04. | கொடிகாமம் சந்தை துவிச்சக்கர-வண்டி பாதுகாப்பு நிலையம் | 3,500 | 100 | 100 |
| | **மிருசுவில் உபபணிமனை** | | | |
| 01. | மிருசுவில் பொதுச்சந்தை | 550 | 100 | 100 |
| 02. | மிருசுவில் மாட். இறை. கடை | 9,000 | 100 | 100 |
| 03. | எழுதுமட்டுவாள் பொதுச் சந்தை | 200 | 50 | 50 |
| 04. | மிருசுவில் வடக்கு சந்தை | 150 | 50 | 50 |
| | **வரணி உபபணிமனை** | | | |
| 01. | வரணி பொதுச்சந்தை | 12,100 | 100 | 100 |
| 02. | வரணி சந்தை மா. இறை கடை | 11,000 | 100 | 100 |
| | **கைதடி உபபணிமனை** | | | |
| 01. | கைதடி பொதுச் சந்தை | 1,650 | 100 | 100 |
| 02. | கைதடி ஆட்டிறைச்சிக்கடை | 10,000 | 100 | 100 |
| 03. | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 11,500 | 100 | 100 |

பு. சுந்தரம்பிள்ளை
விசேட ஆணையாளர்

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். 18-10-93

(சி-7740)

---


இத்தேசத்தை விடிய வைக்கும்
இது மெய்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
- குடும்பத்தினர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (6325)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்
## அந்தியேஷ்டி அழைப்பும்



### திரு. இ. கூ. ஆறுமுகம்

(வடபிராந்திய போக்குவரத்துச்சபை நடாத்துனர்
பருத்தித்துறை சாலை.)

தோற்றம் 07. 09 1934 — மறைவு 20. 09. 1993

மறைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்தும் எம்மைத் தேற்றிய உறவினர்களுக்கும், அன்னாரின் சேவை கருதி ''கண்ணீர் அஞ்சலி'' பிரசுரத்தை வெளியிட்டும், மலர்வளையம் சாத்தியும் அஞ்சலி செலுத்திய வ.பி.போ. சபை பருத்தித்துறை சாலை முகாமையாளருக்கும், உதவி முகாமையாளருக்கும், தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கத்தினருக்கும், சக நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேஷ்டிக்கிரியைகள் 20. 10. 1993 புதன்கிழமை (இன்று) காலை வல்வெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் அனைவரையும் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறும், மதிய போசனத்திலும் பங்கேற்குமாறும் மிகவும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

நன்றியுடன்

**மனைவி, பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்.**

புதுவீடு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.
20-10-1993

[6320]

---

மாணவிகள் அனைவரையும் இக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

-அதிபர்

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,
வதிரி, கரவெட்டி.

(5857)

---

## பரதநாட்டியம், வாய்ப்பாட்டு
## வகுப்புகள்

★ 6 வயதிற்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர் மற்றும் மகளிரும் அனுமதிக்கப்படுவர்.

**ஆரம்பம்: 24-10-93**
**பி. ப. 3 மணி.**
(விஜயதசமி அன்று)

**கலாலயா**
(தொழிற்பயிற்சியகம்)
**விக்டோரியா வீதி, யாழ். நகர்** (சி-7738)

---

## நினைவு கூருகின்றோம்...
## 1993-10-20

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

கேரதீவு இறங்குதுறையில் இந்தியப்படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

யாழ் - சுண்டிக்குளி, உரும்பராய்ப் பகுதிகளில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 06 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பிறேம்** (மரியதாஸ் கோகுலவாசன் - ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு - யாழ்)

1990ஆம் ஆண்டு மல்லாகம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் பலியான தமிழ்ப்பெண்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட பெரியபுல்லுமலையைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு மட்டு - பாரதிவீதியில் சிறிலங்கா காவல்துறையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். சரவணையானன் / ஜெயா** (தங்கையா ஜெயக்குமார் - இருதயபுரம் மட்டு)

**ஜெகன்** (அன்ரனி சந்திரகுமார் - மட்டு)

யாழ் - சித்தன்கேணி, மாகியப்பிட்டியில் சிறிலங்கா விமானப்படையினர் குண்டுவீச்சு தாக்குதல் நடாத்தியதில் தந்தை, மகன், 06 வயதுப் பேரன் ஆகிய 03 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/7735)

சிந்தனைக்கு

கல்விப் பயிற்சி வித்தினை ஊட்டம் அளித்து வளர்க்கிறது
ஆனால் தானாக அது வித்து ஒன்றை உனக்குத் தந்து விடாது
-கலீல் கிப்ரான்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 20-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த பெ. எண் - 05

## தரப்படுத்தல்

தமிழ் மக்களின் உயர் கல்வி வாய்ப்பில், மீண்டும் ஒரு பெரிய வெட்டை சிங்கள பேரினவாத அரசு ஏற்படுத்தியுள்ளது 1992 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற விசேட பரீட்சையின் வெட்டுப்புள்ளி நிர்ணயத்தின் ஊடாக இது நிறைவேற்றப்பட்டுள்ளது இதே வேளை, யாழ். பல்கலைக் கழகத்தின் மாணவர் அனுமதியில், பெரும் குறைப்பை ஏற்படுத்தி அதன் செயற்பாட்டையும் மட்டுப்படுத்த முயற்சித்து வருகின்றது

சிங்கள அரசின் இந் நடவடிக்கையானது, திட்டமிட்ட இன ஒடுக்கு முறையின் ஒரு வடிவமாகும்.

1972இல் இலங்கையில் பல்கலைக் கழக அனுமதியில், இன வாரியான தரப்படுத்தல் கொண்டு வரப்பட்டதுடன் ஆரம்பித்த இவ் தமிழ் மாணவர் அனுமதியில் வெட்டானது ஏதோ ஒரு வகையில் கடந்த இரு தசாப்தங்களாக இடம் பெற்றே வருகின்றது. ஆனால், காலத்திற்குக் காலம் வேறு காரணங்கள் தேடப்படுகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், கடந்த இரண்டு தடவைகளும் தமிழ் மாணவரின் பல்கலைக்கழக அனுமதிக்கு கூறப்பட்டுள்ள விளக்கமாகும்.

1990 / 1991 ஆம் கல்வி ஆண்டிற்கான பல்கலைக் கழக அனுமதிக்கு அரசாங்கம் வெட்டுப் புள்ளியை நிர்ணயம் செய்தபோது தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தப்பட்ட விசேட பரீட்சைக்கு என தனியாக வெட்டுப்புள்ளி நிர்ணயம் செய்தது. அதாவது பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வாக உள்ளது எனக் காரணம் கூறப்பட்டது. இதன் மூலம், தமிழ் மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதி குறைக்கப்பட்டது. இதேவேளை, அடுத்த ஆண்டு அதாவது 1991 / 1992 ஆம் கல்வி ஆண்டிற்கான அனுமதியில் பெறுபேறுகள் போதவில்லை என்ற ரீதியில், மாணவர்களின் அனுமதி எண்ணிக்கை குறைக்கப்பட்டது. இது ஒன்றே சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிட்ட பழிவாங்கும் நடவடிக்கையாகும்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகம் அமைந்ததும், அது தொடர்ந்தும் இயங்குவதும் சிங்களப் பேரினவாத சக்திக்கு உவப்பானதொன்றாக இல்லை. நெருக்கடியான போர்ச் சூழ்நிலையிலும், இப் பல்கலைக் கழகம் இயங்குவது அவர்களுக்கு ஆச்சரியமானதொன்றாக இருப்பதோடு, இப் பல்கலைக் கழகம் தமிழ் தேசிய இனத்தின் இணைப்பு மையமாக இருப்பதாக சிங்களப் பேரினவாத சக்தி

# சிறந்த சிங்கள பௌத்தனாக இன்றைய ஜனாதிபதி உள்ளார்

### காமினி ஜயசூரியா தெரிவிப்பு

(கொழும்பு)

இதுவரை இருந்த ஜனாதிபதிகளைவிட இன்றைய ஜனாதிபதி சிறந்த சிங்கள பௌத்தனாக இருக்கின்றமையைக் காணக்கூடியதாக இருக்கிறது என்று சிங்கள பாதுகாப்பு முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரியா தெரிவித்துள்ளார்.

அநாகரிக தர்மபாலாவின் 129-வது நினைவுதின வைபவத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், வடக்கு, கிழக்கு பகுதியிலுள்ள பிரச்சினை தொடர்பாகவுள்ள உண்மை நிலையை ஜனாதிபதி நேரடியாக வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் எந்தக் கட்டத்திலும் நாடுபிளவு படுவதையோ அல்லது வடக்கு, கிழக்கு இணைப்பையோ தான் ஒரு போதும் செய்யமாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த முடிவுகளுக்காக சிங்கள இனத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் காமினி ஜயசூரிய தெரிவித்தார்.

மேலும், யுத்தம் தொடங்கி சுமார் பத்து ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. சிங்கள இளம் பிள்ளைகள் மட்டுமே யுத்தத்திற்கு முகம் கொடுக்கிறார்கள் சொல்லொணாத் துன்பங்களை அப்பகுதியில் அவர்கள் அனுபவிக்கின்றனர். அதனால் எம்மில் பலர் அவர்கள் எரியும் நெருப்பில் குளிர் காய்ந்து கொண்டு சுகபோகங்களை அனுபவிக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எம்மிடையேயுள்ள சிங்களத் தலைவர்களிடம் வீரத்தைக் காணமுடியவில்லை என்பது மிக வருத்தத்திற்கு உரியதாகும். முன்பு இருந்த இரு ஜனாதிபதிகளும் வடக்குகிழக்கு பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை என்று கூறுவதற்கே பயந்து கிடந்தார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டாம்

### கடற்படை அதிகாரிகளுக்கு பணிப்பு

(கொழும்பு)

வடபகுதிக் கடலில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் கடற்படைக் கப்பல்களின் கட்டளையிடும் அதிகாரிகளுக்கு தமிழ்நாட்டுமீன்பிடிப் படகுகள் மீதான தாக்குதல் நடவடிக்கைகளை தவிர்க்கும்படி கடற்படைத் தலைமைப் பீடம் உத்தர விட்டுள்ளது

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டிருக்கும் தகவல் ஒன்றில் தமிழக மீனவர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடாத்துவதாகசிறிலங்கா கடற்படைமீது இந்தியா குற்றம் சாட்டியதன் பின்னர் கடற்படை அதிகாரிகளுக்கு புதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத ஊர்வலத்தை கலைக்க துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது

### - பிரதீப் பொலிஸ்மா அதிபர்

(மாத்தறை)

தென்மாகாண முதல்வராக அமரசிறி தொடங்கொட பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் சட்டவிரோதமான முறையில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. அந்த ஊர்வலத்தில் வந்தோரைக் கலைந்து செல்லும்படி வேண்டுகோள் விடுக்ப்பட்டபோதும் அது புறக்கணிக்கப்பட்டதால் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேரிட்டது. இவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிராங்க்த சில்வா கூறியுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில், பொலிசாரின் உத்தரவை மீறி ஊர்வலம் தொடர்ந்து செல்ல முற்பட்ட போது அதனைத் தடுக்க கண்ணீர் புகை பிரயோகிக்கப்பட்டது அப்போது பெருந்தொகையானோர் பொலிசார் மீது கல்வீச்சு நடத்தினர். பொலிஸ் ஜீப் வண்டிகள், வாகனங்களை அடித்து நொருக்கினர். நிலைமை எல்லை மீறவே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்செய்ய நேரிட்டது என்று தெரிவித்தார்

இந்த துப்பாக்கிசூட்டு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதும், பலர் காயமுற்றதும் தெரிந்ததே.

## விசாரணைகள் பூர்த்தியாம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாகொலை தொடர்பாக கைதாகி தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் பற்றிய விசாரணைகள் பூர்த்தியடைந்துவிட்டன. தொடர்புள்ளவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். ஏனையோர் விடுவிக்கப்படுவார்கள். இவ்வாறு கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் முன்னிலையில் சிரேஷ்ட அரச சட்டவாதி தெரிவித்தார்.

## பொலிசார் திட்டமிட்டு குழப்பம் விளைவித்தனர்

### - மேல்மாகாண முதல்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிசாரின் திட்டமிட்ட செயலினாலேயே குழப்பம் நேர்ந்துள்ளது என்று காலியில் அண்மையில சுதந்திரக் கட்சியை சேர்ந்த அமரசிறி தொடங்கொட முதலமைச்சராக பதவியேற்ற அன்று இடம்பெற்றசம்பவம் தொடர்பாக மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில், அமரசிறி தொடங்கொட பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் மக்களுக்காக நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கையில் அரசாங்க ஆதரவாளர்கள் குழப்பம் விளைவித்தனர். அதனை அடக்கும் போர்வையில் பொலிசார் மக்களைப் போகவிடாது தடுத்து குழப்பத்தைக் கூட்டி துப்பாக்கி

## போர்க்களங்களே எங்கள் புகலிடங்களாக இருக்கட்டும்

சிறிலங்கா ஆட்சித் தலைவர் டிங்கிரி பண்டா விஜேதுங்க அவர்கள், இலங்கையின் வடக்கு கிழக்கில் இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது; பயங்கர வாதப்பிரச்சினையே இருக்கிறது; அதையும் விரைவில் இல்லாதழித்து விடுவோம் என்று கூறியதிலிருந்து,

சுதந்திரம் கேட்டுக் கிடைப்பதில்லை;

விடுதலை பேசிப் பெறுவதில்லை;

என்பதை மீண்டுமொருமுறை ஈழத்தமிழினம் உறுதிப் படுத்திக் கொண்டுள்ளது.

அடக்கப்படும் ஒரு இனம் தன் இறைமைக்காகவும், உரிமைக்காகவும் போராடுவது பயங்கர வாதமென்றால், இழந்து போன தன் தாய் மண்ணை மீட்டெடுப்பதற்காக அம் மண்ணுக்கு உரித்துடையவர்கள் போராடுவது பயங்கர வாதமென்றால் நாங்கள் பயங்கரவாதிகளாகவே இருந்து விட்டுப் போகின்றோம்.

சமதரையான எங்கள் தாய் மண்ணை பள்ளத் தாக்குகள் நிறைந்த பூமியென்று இனிவரும் தலைமுறை பேசக் கூடிய அளவுக்கு, எதிரி குண்டுகளை வீசி குழியாக்கி எம் மண்ணைப் புண்ணாக்குகின்றான்.

எங்கள் நாசித் துவாரங்கள் நச்சுப் புகையையே சுவாசிக்குமளவுக்கு எதிரி வீசி வெடிக்கச் செய்யும் எறிகணைகளாலும், குண்டுகளாலும் கந்தகக் காற்றை எமது பரவெளியில் கலக்க விடுகிறான்.

தினம் தினம் எங்கள் கடற்பரப்பு எதிரியின் நரபலிக் களமாகி, தமிழனின் குருதி கொப்பளிக்கிறது.

உலகத்துக்குச் சமதையாக வளர்ந்திருக்க வேண்டிய எங்கள் அறிவியல், தொழில் நுட்பம், விஞ்ஞானம், கலை என யாவினதும் வளர்ச்சிக்குரிய பாதைகள் அனைத்தையும் பகைவன் மூடி விட்டு திறப்பைத் தானே வைத்திருக்கின்றான்.

தென் தமிழீழம் சொல்லவொண்ணா துயர் சூழ்ந்து கண்களில் நீர் வற்றி கலங்கிக் கிடக்கிறது.

தமிழனென்றால் ஏதோகால்செருப்பு, கழிவுப்பொருள், தொடவும் கூடாத தொழுநோயாளி என்பது போல சிங்கள சிறுசுகளுக்கு சொல்லிக் கொடுத்து வளர்த்து விடுகின்றான்.

இத்தனையையும் பொறுத்துக் கொண்டு அவனுக்குக் கைகட்டி சேவகம் செய்தும், சந்தனம்பூசி சாமரம் வீசியும் வெறும் சோற்றுப் பிண்டமாக தின்று கிடப்பதிலும், எழுந்து நின்று விடுதலைக்காகப் போராடி விழுந்து மடிவது எவ்வளவு பெருமையானது.

தமிழனை நாயென்று நையாண்டி செய்தவர்களைபுலியென்று கிலிகொள்ள வைத்தான் எங்கள் தலைவன் பிரபாகரன்.

சூடு சுரணையற்று தூங்கிக் கிடந்த தமிழனை மேலும் தூங்கவைப்பதற்காக தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்த பழைய தலைவர்களிடமிருந்து எம்மை மீட்டெடுத்து, பூபாளம் பாடக் கற்றுத்தந்தான் எங்கள் தலைவன் பிரபாகரன்.

இப்போது ஈழத்தமிழினம் தன் வாழ்வுக்காகப் போராடத் தொடங்கிவிட்டது

தமிழனை எவன் தொட்டாலும், தொட்டவன் எவனாக இருந்தாலும் அவன் நிம்மதியாக நீட்டிப்படுக்க முடியாது என்பதை உலகம் புரிந்துகொண்டுவிட்டது.

இத்தனைக்குப் பின்பும், இன்னும் புத்தி தெளியாத சிறிலங்கா ஆட்சித்தலைவரும், அவர்களின் படைத்துறைத் தளபதிகளும், நாங்கள் போராடி மீட்டெடுத்த எங்கள் நிலப் பரப்பில் முன்னேறி வந்து 'தமிழனை அழித்துவிடுவோம்' என்று ஆரவாரிக்கின்றார்கள்.

இறுதி வரை போராட புலிகள் உறுதி பூண்டுள்ளோம். உங்கள் பிள்ளைகளின் சத்திய யுத்தத்துக்குக் கொஞ்சம் தோள் கொடுங்கள்.

பத்து வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் குடாநாட்டு வீதிகளில் பவனிவரும் எதிரியின் கனவைக் கலைத்து விடு

1990 / 1991 ஆம் கல்வி ஆண்டிற்கான பல்கலைக் கழக அனுமதிக்கு அரசாங்கம் வெட்டுப் புள்ளியை நிர்ணயம் செய்தபோது தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தப்பட்ட விசேட பரீட்சைக்கு என தனியாக வெட்டுப்புள்ளி நிர்ணயம் செய்தது. அதாவது பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வாக உள்ளது எனக் காரணம் கூறப்பட்டது. இதன் மூலம், தமிழ் மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதி குறைக்கப்பட்டது. இதேவேளை, அடுத்த ஆண்டு அதாவது 1991 / 1992 ஆம் கல்வி ஆண்டிற்கான அனுமதியில் பெறுபேறுகள் போதவில்லை என்ற ரீதியில், மாணவர்களின் அனுமதி எண்ணிக்கை குறைக்கப்பட்டது. இது ஒன்றே சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிட்ட பழிவாங்கும் நடவடிக்கையாகும்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகம் அமைந்ததும், அது தொடர்ந்தும் இயங்குவதும் சிங்களப் பேரினவாத சக்திக்கு உவப்பானதொன்றாக இல்லை. நெருக்கடியான போர்ச் சூழ்நிலையிலும், இப் பல்கலைக் கழகம் இயங்குவது அவர்களுக்கு ஆச்சரியமானதொன்றாக இருப்பதோடு, இப் பல்கலைக் கழகம் தமிழ் தேசிய இனத்தின் இணைப்பு மையமாக இருப்பதாக சிங்களப் பேரினவாத சக்திகள் கருதுகின்றன.

இந் நிலையில் யாழ். பல்கலைக் கழகத்தின் வரம்புகளைக் குறைக்கவும், செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதிலும் சிங்கள அரசு தீவிர அக்கறை காட்டி வருகின்றது. இதன் ஒரு கட்டமாக கடந்த சில வருடங்களாக யாழ். பல்கலைக் கழகத்திற்கு வடபகுதி மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கி வருகின்றது. இதன் மூலம் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும் உறவை துண்டிப்பதோடு, தமிழர் தாயகத்திற்கு இடையில் ஏற்படக் கூடிய ஐக்கியத்தையும் குலைத்து விட திட்டமிட்டுச் செயலாற்றுகின்றது.

மேலும், இவ் வருடம் மாணவர்களின் அனுமதி எண்ணிக்கையில் பெரு வெட்டை ஏற்படுத்துவதன் மூலம் பல்கலைக் கழகத்திற்கான நிதியிலும் பெரு வெட்டை ஏற்படுத்தி பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு முற்படுகின்றது. அதாவது, இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக் கழகங்களுக்கு அப் பல்கலைக் கழகங்கள் கோரிய தொகைக்கும் அதிகமான மாணவர்களை அனுமதித்துள்ள சிறிலங்கா அரசு யாழ். பல்கலைக்கழகத்திற்கு சுமார் 50 வீத வெட்டை ஏற்படுத்தியுள்ளது

ஆனால், சிங்களப் பேரினவாதம் இவ்வாறான இன ஒடுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுதல் புதியதொன்றுமல்ல. எதிர்பார்க்கப்படாதஒன்றுமல்ல. இதேவேளைதமிழர்தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு பல்வேறு உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டது காரணமாக இருப்பினும் எழுபதுகளின் ஆரம்பத்தில் பல்கலைக் கழக அனுமதி மறுக்கப்பட்ட போதே போராட்டம் தீவிர ஆயுதப் போராட்டமாக முனைப்புப் பெற்றது. ஆயினும் பல்கலைக்கழக அனுமதியில் காட்டப்பட்ட பாரபட்சம் சிங்களப் பேரினவாதத்தால் கைவிடப்படவில்லை.

ஆனால் இதில் வேதனையளிக்கும் விடயமாக இருந்தது என்னவெனில், பல்கலைக் கழக அனுமதி முறையை படிப்படியாக தமிழ் சமுதாயம் ஏற்றுக் கொண்டதாகும் ஆனால் தற்பொழுது மீண்டும் ஒரு தடவை பல்கலைக் கழக அனுமதியில் பெரு வெட்டு ஏற்பட்டபோது இது குறித்து பெரும் அங்கலாய்ப்பு எழுந்துள்ளது. அரசின் பாரபட்சம் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஆனால், பேரினவாதத்தின் செயலுக்கு காலத்திற்கு காலம் தமது எதிர்ப்புணர்வை காட்டுவதும், பின்னர், அதன் அனுமதி முறையை ஏற்றுக் கொள்வதும் பிரச்சினைக்குத் தீர்வாகாது. இதற்கு தமிழ் தேசிய இனம் விடுதலை பெறுவதைத் தவிர மாற்றுவழி ஏதுமில்லை இதனை பல்கலைககழக அனுமதிக்குப் போட்டியிடுவோரும் அதை வழிநடத்த முற்படுவோரும் புரிந்து கொள்ளுதல் விரும்பத்தக்கது

அமரசிறி தொடங்கொட பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் சட்ட விரோதமான முறையில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. அந்த ஊர்வலத்தில் வந்தோரைக் கலைந்து செல்லும்படி வேண்டுகோள் விடுக்ப்பட்டபோதும் அது புறக்கணிக்கப்பட்டதால் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேரிட்டது. இவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிராங்க் த சில்வா கூறியுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில், பொலிசாரின் உத்தரவை மீறி ஊர்வலம் தொடர்ந்து செல்ல முற்பட்டபோது அதனைத் தடுக்க கண்ணீர் புகை பிரயோகிக்கப்பட்டது அப்போது பெருந்தொகையானோர் பொலிசார் மீது கல்வீச்சு நடத்தினர். பொலிஸ் ஜீப் வண்டிகள், வாகனங்களை அடித்து நொ[illegible]கிப் பிரயோகம்செய்ய நேரிட்டது என்று தெரிவித்தார்

இந்த துப்பாக்கிசூட்டு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதும், பலர் காயமுற்றதும் தெரிந்ததே.

யோர் விடுவிக்கப்படுவார்கள். இவ்வாறு கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் முன்னிலையில் சிரேஷ்ட அரச சட்டவாதி தெரிவித்தார்.

# பொலிசார் திட்டமிட்டு குழப்பம் விளைவித்தனர்

## – மேல்மாகாண முதல்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிசாரின் திட்டமிட்ட செயலினாலேயே குழப்பம் நேர்ந்துள்ளது என்று காலியில் அண்மையில சுதந்திரக் கட்சியை சேர்ந்த அமரசிறி தொடங்கொட முதலமைச்சராக பதவியேற்ற அன்று இடம்பெற்றசம்பவம் தொடர்பாக மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில், அமரசிறி தொடங்கொட பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் மக்களுக்காக நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கையில் அரசாங்க ஆதரவாளர்கள் குழப்பம் விளைவித்தனர். அதனை அடக்கும் போர்வையில் பொலிசார் மக்களைப் போகவிடாது தடுத்து குழப்பத்தைக் கூட்டி துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதனால் இறந்த இருவரது கொலைக்கான பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும் பதவிப் பிரமாணம் செய்வதை ஒத்தி வைக்கும்படி ஆலோசனை கூறி தென் மாகாண ஆளுநர் பாக்கீர் மாக்கார் நடந்து கொண்ட முறை ஜனநாயகத்திற்கு எதிரானதாகும். ஜனநாயகத்தை கௌரவிக்கும் அனைவருமே இச் செயலை ஒருமுகமாக எதிர்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கடத்திச் செல்வதற்கு நான் சிறு பிள்ளையல்ல

## ஆளுநரிடம தெரிவிப்பு

(மாத்தறை)

என்னை எவரும் கடத்திச் செல்வதற்கு நான் ஒன்றும் சின்னப்பிள்ளை அல்ல இவ்வாறு தென் மாகாண சபை உறுப்பினர் அநாகரிக ரைட்டர் திலகசேகரா ஆளுநரிடம் தெரிவித்தார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த காலி மாவட்ட உறுப்பினரான இவரிடம், ஆளுநர் நீங்கள் எவராலும் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தீர்களா என வினவிய போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமரசிறி தொடங்கொட முதல்வராக சத்தியப்பிரமாணம் செய்வதை ஆதரிக்கிறீர்களா என்று ஆளுநர் அடுத்த கேள்வியை தொடுத்தபோது எனது கட்சியின் சார்பிலும் தனிப்பட்ட முறையிலும் ஆதரிக்கிறேன் என்று திலகசேகரா பதிலளித்தார்.

# தபாலில்காசு அனுப்புவதற்கு தண்டனை அதிகரிப்பு

(கொழும்பு)

நாணயத்தாள்களை தபாலில் அனுப்பும் குற்றத்திற்கான தண்டனை ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அதிவிசேட வர்த்தமானி மூலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 27ஆவது பிரிவு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தத்தின்படி வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குள் நாணயத் தாள்களை அனுப்புதல், அதனைப் பெறுதல் என்பன போன்ற செயல்களும் குற்றச் செயல்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

இது கால வரையில் இலங்கைக்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கும், இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கும் நாணயத்தாள்களை அனுப்புவதே தண்டனைக்குரிய குற்றமாக இருந்தது.

இத்துடன் இத்தகைய குற்றச் செயலுக்கு இதுவரை இருந்து வந்த அபராத தண்டனையுடன் தற்போது பத்து வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனையும் சேர்க்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.

# தனிப்பட்ட காரணங்களுக்காக பதவியை துறந்துள்ளேன்

## – வட மேல் மாகாண முன்னாள் ஆளுநர்

(கொழும்பு)

வடமேல் மாகாணசபையின் ஆளுநரான மொன்டேகு ஜெயவிக்கிரம தனிப்பட்ட காரணங்களுக்காகவே தமது பதவியை இராஜினாமா செய்திருப்பதாக அறிவித்துள்ளார்

அண்மையில் அவர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் மேலும் குறிப்பிடுகையில், இதற்கு முன்னரே இதனைச் செய்வது தனது நோக்கமாக இருந்துள்ளதுஎனவும், ஆனால் நடைபெறவிருந்த மாகாண சபைத் தேர்தல்களையும் அதனைத் தொடர்ந்து உடனடியாக வந்த நீதிமன்ற வழக்கையும் கருதி இதனைத் தான் தவிர்த்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை அடுத்து ஐ. தே. கவினரை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைத்ததும், அதனைத் தொடர்ந்து எதிர்க் கட்சியினர் தாக்கல் செய்த வழக்கில் எதிர்க்கட்சியினர் வெற்றி பெற்றதும் தெரிந்ததே.

வடமேல் மாகாண ஆளுநரின் பதவி துறப்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க புதிய ஆளுநராக கலாநிதிகருணாசேன கொடித்துவக்குவை நியமனம் செய்துள்ளார்.

**எள்ளைப் பயிரிடுவோம்**
**எண்ணெய் வளம் பெருக்கிடுவோம்**

தமிழனை நாயென்று நையாண்டி செய்தவர்களைபுலியென்று கிலிகொள்ள வைத்தான் எங்கள் தலைவன் பிரபாகரன்.

சூடு சுரணையற்று தூங்கிக்கிடந்த தமிழனை மேலும் தூங்கவைப்பதற்காக தாலாட்டுப் பாடிக் கொண்டிருந்த பழைய தலைவர்களிடமிருந்து எம்மை மீட்டெடுத்து, பூபாளம் பாடக் கற்றுத்தந்தான் எங்கள் தலைவன் பிரபாகரன்.

இப்போது ஈழத்தமிழினம் தன் வாழ்வுக்காகப் போராடத் தொடங்கிவிட்டது.

தமிழனை எவன் தொட்டாலும், தொட்டவன் எவனாக இருந்தாலும் அவன் நிம்மதியாக நீட்டிப்படுக்க முடியாது என்பதை உலகம் புரிந்துகொண்டுவிட்டது.

இத்தனைக்குப் பின்பும், இன்னும் புத்தி தெளியாத சிறிலங்கா ஆட்சித்தலைவரும், அவர்களின் படைத்துறைத் தளபதிகளும், நாங்கள் போராடி மீட்டெடுத்த எங்கள் நிலப்பரப்பில் முன்னேறி வந்து 'தமிழனை அழித்துவிடுவோம்' என்று ஆரவாரிக்கின்றார்கள்.

இறுதி வரை போராட புலிகள் உறுதி பூண்டுள்ளோம். உங்கள் பிள்ளைகளின் சத்திய யுத்தத்துக்குக் கொஞ்சம் தோள் கொடுங்கள்.

பத்து வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் குடாநாட்டு வீதிகளில் பவனிவரும் எதிரியின் கனவைக் கலைத்துவிடுவோம். அவன் வரத்துடிக்கும் பாதையில் மட்டுமல்ல, தங்கி நிற்கும் தங்ககத்தையும் நிர்மூலம் ஆக்கிவிடுவோம். இப்போது வேண்டுவதெல்லாம் கலங்காத உறுதியும், போராடும் துணிவும், வெல்வோம் என்ற நம்பிக்கையுமே.

வெல்வோம் என்ற நம்பிக்கையுடன் போராடுபவரை எந்தச் சக்தியாலும் வீழ்த்த முடியாது.

செல்லும் வழியின் தெளிவும், சேனையின் பெருக்கமும், வழி நடத்தும் தலைவன் மீது விசுவாசிப்பும், ஒன்றாக இணைந்து நிற்கும் பிணைப்புமுள்ள ஒரு விடுதலைப் போரை உலகமே திரண்டு வந்து எதிர்த்தாலும் உருக்குலைக்க முடியாது.

இப்போது எமக்கு அதுவே வேண்டும். குருதிகுடிக்க வந்த கோரப்பற்களைப் பிடுங்கி குப்பையிலே வீசுவோம்.

தாய், பிள்ளை, தந்தை, கணவன் மனைவி, ஆண் பெண் என்ற பேதமின்றி போர்க்கோலம் பூணுவோம்.

புறப்படுங்கள்! போர்க்களங்களே எங்கள் புகலிடங்களாக இருக்கட்டும்.

எங்களின் எழுச்சிக்கும், வெற்றிக்குமான உரமாகத் தான் பல்லாயிரக்கணக்கான மாவீரர் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

வாருங்கள் போராடுவோம்.

(நன்றி: வெளிச்சம், ஐப்பசி - 1993. ஆசிரிய தலையங்கம்)

# ரஷ்ய அதிபர் தேர்தலில் கொர்ப்பச்சேவ் போட்டியிடலாம்?

ரஷ்ய அதிபர் பதவிக்கான தேர்தலில் தான் போட்டியிடக்கூடும் என்பதை சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர் மிகையில் கொர்ப்பச்சேவ் சூசகமாகத் தெரிவித்துள்ளார்

மாஸ்கோவிலிருந்து வெளியிடப்படும் ''சொம்ஸோமோல்ஸ் கயா பிராவ்டா'' பத்திரிகைக்கு அண்மையில் அளித்த பேட்டியில் அவர் ரஷ்ய விவகாரங்களில் தலையிட்டு நாட்டைக் காப்பாற்ற வேண்டியதேவை ஏற்பட்டால் அவ்வாறே செய்வேன் எனக் கூறியுள்ளார்.

உள்நாட்டில் செல்வாக்கு இழந்தும் வெளிநாட்டில் பிரபல்யம் பெற்றும் இருப்பதும் குறித்து அவரிடம் கேட்ட மற்றுமொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் ''இதற்கு தற்போதைய ஆட்சியாளர்களே பதில்தர வேண்டும். தகவல் சாதனங்கள் மூலம் மக்களுடன் நான் தொடர்புகொள்வதை சாத்தியமான சகலவழிகளிலும் அவர்கள்தடுத்து வருகின்றனர் நான் நேற்றைய மனிதனாக இருந்தால் அவர்கள் ஏன் அச்சம் கொள்ள வேண்டும்'' என்று தெரிவித்தார்.

எதிர்க்கட்சி ஒன்று இல்லாமலும், தகவல் சாதனங்களை அரசாங்கம்தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிலையிலும் சுதந்திரமான தேர்தல் நடத்தப்பட முடியுமா? என்று கேட்கப்பட்டபோது, யெல்சினை எதிர்க்க திறமைசாலிகளுக்குப்பஞ்சமில்லை. ஆனால் அவரது நிபந்தனைகள் திறமைசாலிகளைத் தடுத்து விடுகின்றன எனக்கொர்ப்பச்சேவ் பதிலளித்தார்.

இன்னுமொரு பேட்டியின் போது யெல்ட்சின் முழுநாட்டுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை என்பதை அண்மைய சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன என்றார்.

ஈழநாதம்

# ஜெயலலிதா ஆட்சி மீது தமிழக ஆளுநர் புகார்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சிமுறை குறித்து ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவிடம் தமிழக ஆளுநர் புகார் தெரிவித்துள்ளார். சுப்பர் முதலமைச்சர்போல் ஆளுநர் ரெட்டி செயற்படுகிறார் என அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் வெளியிட்ட அறிக்கைக்கு முதல்வர் ஜெயலலிதா மறுப்பு தெரிவிக்காமையே ஆளுநர் ரெட்டிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

டில்லி சென்ற ஆளுநர் பிரதமர் நரசிம்மராவை சந்தித்து ஒருமணி நேரம் பேசினார். உள்துறை அமைச்சர் சவான் மற்றும் காங்கிரஸ் பிரமுகர்களையும் அவர் சந்தித்தார். ஜனாதிபதியுடனான ஆளுநரின் சந்திப்பும் ஒருமணி நேரம் நீடித்தது.

முதலமைச்சர் ஜெயலலிதா இதைத்தொடர்ந்து நேற்று முன் தினம் டில்லி விஜயம் செய்யவிருந்ததும் அது பின்னர் ஒத்திபோடப்பட்டமையும் தெரிந்ததே.

# தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி இரகசிய உடன்பாடு

## நாஞ்சில் மனோகரன் அறிவிப்பு

(சென்னை)

தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி தொடர்பாக டில்லியில் இரகசிய உடன்பாடு காணப்பட்டு விட்டதாக தி. மு. க. விலிருந்து அண்மையில் வெளியேற்றப்பட்ட நாஞ்சில்மனோகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கோபாலசாமிக்கு ஆதரவாக கருணாநிதியை கொலை செய்ய விடுதலைப்புலிகள் சதி செய்கின்றனர் என உளவுத்துறை தயாரித்த செய்தியை கருணாநிதி பத்திரிகைக்கு தெரிவித்த அன்றே தி மு. க பிரமுகரான மாறனும் சுப்பிரமணிய சுவாமியும் சென்னையில் இரகசியமாக சந்தித்ததுடன் மதிய விருந்து உண்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதியன்று மாறனும்சுப்பிரமணியம் சுவாமியும் டில்லியில் சந்தித்து பாராளுமன்றத்தில் தி. மு க விற்கு 9 இடங்களும் காங்கிரசிற்கு 30 இடங்களும் சட்டப் பேரவைக்கு தி. மு. க விற்கு 180 இடங்களும் மீதி காங்கிரசிற்கும் என ஒப்பந்தம் பேசி முடிக்கப்பட்டது.

வெளியான செய்தியில் கருணாநிதியை கொல்ல விடுதலைப்புலிகள் சதி என்றே குறிப்பிட்டிருந்தது ஆனால்அதில் கருணாநிதி வை. கோபாலசாமியின் ஆதாயத்திற்காக கருணாநிதியை கொல்ல விடுதலைப் புலிகள் சதி என்று மாற்றும்படி செய்தார் என்றும் நாஞ்சில் மனோகரன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# 'வெளிச்சம்' சஞ்சிகை இன்று வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக ஐப்பசிமாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், உலக ஆசிரியர் தினத்தையொட்டி வழங்கிய செய்தியுடன் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும் ...உத்தமா தஇதழில்' கருத்துலகமும் வாழ்வியக்கமும்' என்ற கட்டுரையை எழுதிய பிரம்மஞானியின் 'மனிதனைத் தேடும் மனிதன்' என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் புதுவை இரத்தினதுரை, வவுனியா திலீபன், தொண்டையூர் துவாரகன், ப. தயாளன், க. பிரமதீஸ்வரி ஆகியோரின் கவிதைகளும் மு. அநாதரட்சகன், கோளாவிலூர் கிங்ஸ்லி, சுதாமதி ஆகியோரின் சிறுகதைகளும் சபா. ஜெயராசா, சாந்தி ஆகியோரின் கட்டுரைகளும் நாக. பத்மநாதனின் உருவகக்கதையும் இடம்பெற்றுள்ளன.

இது வெளிச்சத்தின் பத்தொன்பதாவது இதழாகும். அடுத்த 'வெளிச்சம்' இதழ் ...

---

மட்டு.

லங்கா இராணுவத்தினர் கித்துள் கிராமத்தையும் கிருஷ்ணன் கிராமத்தையுமே திடீரெனச் சுற்றிவளைத்தனர்.

இவ்வாறு சுற்றிவளைத்த படையினர் அவ்விருகிராமத்து ...

# பாகிஸ்தான் பிரதமராக பெனாசீர் தெரிவானார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் புதிய பிரதமராக முன்னாள் பிரதமர் திருமதி பெனாசீர்பூட்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். மூன்று ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் திருமதி பெனாசீர்பூட்டோ இப்போது ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பகிரங்க வாக்கெடுப்பில் பெனாசீர் 121 வாக்குகளையும் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட நவாஸ் ஷெரீப் 72வாக்குகளையும் பெற்றனர். நவாஸ் ஷெரீப் தனது தோல்வியை ஏற்றுக் கொண்டதுடன் பிரதமர் பெனாசீருக்கான ஆதரவையும் வெளியிட்டார்.



பாகிஸ்தான் மத்திய அரசின் ஸ்திரதன்மைக்கு முக்கிய பங்கு வகிக்கும் பஞ்சாப் மாநில சட்டசபையின் சபாநாயகராக பெனாசீரின் மக்கள் கட்சியை சேர்ந்தவரே தெரிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

கிளாலியில்

கிளாலியில் புலிகளின் தளங்களை அழிக்க யாழ்தேவி நடவடிக்கையிலும்விட விமானப் படையை பயன்படுத்தியிருக்கலாமே என்று கேட்கப்பட்டபோது, ''அப்போ நாட்டிலுள்ள எல்லா இராணுவ மூளைகளும் அதுபற்றி சிந்திக்காத முட்டாள்கள் என்று கூற முனைகிறீர்களா இப்படியான அபாயகரமான ஆலோசனைகளை கூறுபவர்கள் போரை எப்படி வெல்லலாம் என்று ஆராய ஒருகுழுவை அமைக்கலாமே என்றார் இராணுவ தளபதி.

18 கிலோ மீற்றர் முன்னேறி ஏன் பின் வாங்கினீர்கள் எனக் கேட்டபோது, ''நாம் எமது இராணுவ இலக்குகள் குறித்து தெளிவாக உள்ளோம் இதைசாதாரணமானவர்களும் கதிரையில் இருந்து கொண்டிருப்பவர்களும் அறியமாட்டார்கள். அவர்களுக்கு இதுகுறித்து விளக்கமளிப்பது எனது வேலையல்ல'' என்றார் சிசில்.

கிளாலியில் இப்போதும் படகுகள் ஓடுகின்றனவே? ''எமக்கு தெரிந்த வரையில் அப்படியான ஒரு படகுசேவை கிளாலிக்கும் குஞ்சு பரந்தனுக்கும் இடையில் நடைபெறவில்லை. எமது இராணுவ புலனாய்வாளர்கள் எமக்கு கூறுவதைவிட கொழும்பிலுள்ள உங்களுக்கு ஏதும் அதிகமாக தெரிந்தால் நாட்டுப்பற்றாளர்கள் போல் அத்தகவல்களை எமக்கு தாருங்கள்'' என்றார்.

இராணுவ பலத்தை அதிகரிப்பது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த இராணுவத் தளபதி, ''இராணுவத்துக்கு மேலதிக பலம் தேவை என்பது எனது கருத்து நான் இதை முன்னைய ஜனாதிபதிக்கு அறியத்தந்தபோதிலும் அதிக பலன் கிடைக்கவில்லை ஆனால் ஜனாதிபதி விஜேதுங்க சாதகமாக உள்ளார். ஜெனரல் வனசிங்காவும் மேலதிக துருப்புகளை கோரியுள்ளார்'' என்றார்.

---

பிரச்சினைகளைத்

ழர் பிரச்சினையை தீர்க்க முடியும் என நீங்கள் நம்புகின்றீர்களா? என கேட்டபோதே ...னைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதேயாகும் என்று கூறுகின்றனரே?

பதில்: இது மிகப் பெரிய

# வர்த்தகர்கள் சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையை நேற்று மாலை வந்தடைந்த எம். பி ''வாதுவ'' கப்பலில் பொருள்களை ஏற்றிய தனிப்பட்ட வர்த்தகர்கள் கீழ்வரும்சான்றுகளுடன் யாழ் செயலகத்தில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் காலை 9.00 மணிக்கு சந்திக்குமாறு யாழ் செயலகத் திட்டப்பணிப்பாளர் திரு பத்மநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவர்கள் கப்பலில் பொருள்களை ஏற்றியமைக்கான சான்றுகள் மற்றும் பொருள்பட்டியல் என்பனவற்றை கொண்டுவருமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(பா)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 18.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11267

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-9404, 27-4162, 26-6568, 42-6157, 26-5202, 24-7992, 22-5857, 28-1414, 42 3289, 27-7986, 26-7307, 26-3321, 26 5725, 26 1349, 26 6026, 26-4526, 26-6382, 24-5437, 26 3412, 26-3473, 24-6846.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-1542, 24-6161, 28-3233, 24-5703, 26-6983, 28-8444, 24-6944, 42-2151, 24-0576, 26-1495, 28-6640, 27-7542, 22 3611, 26-8746, 24-0415, 26-9186, 28-4255, 22-6073.

## 19.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11280

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-6686, 24 9337, 24 5015, 24-7327, 24.6972, 27-6583, 42-3267, 27-7263, 42-3339, 26-8419, 28-1085, 24-6211, 27-2016, 28 5039, 28-2156, 24-5041, 42-1178, 24 5707, 41-7563, 24-5087.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-2414, 27-9156, 27-5197, 26 5846, 28-9259, 41-9355, 24-1040, 41-9663, 28-8589, 27 4024, 24 5418, 40-4760, 24 4726, 24-7267, 42-0969, 43 4045, 26 5046, 42-0999, 24-2680, 22-9193, 26-0525, 41 6784, 26-1285, 41-9652, 24-9938, 24-7084, 41.9696.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் பாக்கியம்

சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி இரத்தினம் பாக்கியம் (19-10-1993) செவ்வாய்க்கிழமை காலமானார் இவர் சண்முகம் இரத்தினம் (வதனி நகைமாளிகை சாவகச்சேரி, கிளை-கொடிகாமம்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி து. புவனேஸ்வரி (பிரதம தாதி அரசினர் போதனா வைத்திய சாலை யாழ்ப்பாணம்), திரு. இ. சண்முகலிங்கம் (வதனி நகை மாளிகை), திரு. இ தர்மகுலசிங்கம் (வதனி நகை மாளிகை), திரு இ. சுப்பிரமணியம் (வதனி நகை மாளிகை), திரு. இ. பாக்கியராசா (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சு. துரைராசசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), திருமதி ச. ஈஸ்வரி, திருமதி த. சகுந்தலாதேவி (ஆசிரியை அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி], திருமதி பா. வசந்தகுமாரி, திருமதி சு. ரஞ்சனாதேவி (சங்கீத ஆசிரியை இந்துக் கல்லூரி சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்விகள் ச. சிவப்பிரியா, ச. மதிவதனி, து பிரியரஜனி, து. ஜெயப்பிரதீபா, சு. ஜான்சி, செல்வன்கள் ச. லதுர்ஜிகாந்த், ச. பிரதாப், து. திலீப்குமார், பா. அருள்பிரசாத், பா. ஜெயப்பிரசாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் இன்று புதன்கிழமை (20-10-1993) பி. ப. 2 மணியளவில் ''புவனபதி'' இல்லத்திலிருந்து கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

''புவனபதி''
பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
இ. சண்முகலிங்கம்
(மகன்.)

(6330)

வெளியிட்ட அறிக்கையில் கோபாலசாமிக்கு ஆதரவாக கருணாநிதியை கொலை செய்ய விடுதலைப்புலிகள் சதி செய்கின்றனர் என் உளவுத் துறை தயாரித்த செய்தியை கருணாநிதி பத்திரிகைக்கு தெரிவித்த அன்றே தி மு. க பிரமுகரான மாறனும் சுப் பிரமணிய சுவாமியும் சென்னையில் இரகசியமாக சந்தித்ததுடன் மதிய விருந்து உண்டனர் எனக் குறிப்பிடபப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதியன்று மாறனும்சுப்பிரமணியம் சுவாமியும் டில்லியில் சந்தித்து பாராளுமன்றத்தில் தி. மு க வீற்கு 9 இடங்களும் காங்கிரசிற்கு 30 இடங்களும் சட்டப் பேரவைக்கு தி. மு. க விற்கு 180 இடங்களும் மீதி காங்கிரசிற்கும் என ஒப்பந்தம் பேசி முடிக்கப்பட்டது.

உளவுத்துறை முதலில் தயா

ஆட்சியாளரை

சாரி அரசியல் பிரமுகர் ஒருவரை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

மேலும் ஓய்வுபெற்ற படை அதிகாரிகளை மீளப் படையில் சேருமாறு பாதுகாப்பு அமைச்சு விடுத்த அழைப்பிற்கும் பயன் ஏதும் கிட்டவில்லை எனவும் அப்பத்திரிகை தெரிவித்தது

# இன்று வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக ஐப்பசிமாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், உலக ஆசிரியர் தினத்தையொட்டி வழங்கிய செய்தியுடன் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும்

மட்டு.

லங்கா இராணுவத்தினர் கித்துள் கிராமத்தையும் கிருஷ்ணன் கிராமத்தையுமே திடீரெனச் சுற்றிவளைத்தனர்.

இவ்வாறு சுற்றிவளைத்த படையினர் அவ்விருகிராமத்து மக்களையும் முகாம்களுக்கு கொண்டு சென்று விசாரணை செய்தபின்னர் பத்துப்பேரை மட்டும் தடுத்து வைத்துள்ளனர். ஏனையோர் அன்றைய தினமே வீடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்

நெடுங்கேணியைச் சேர்ந்த ஆ. பாவிலுப்பிள்ளை என்பவர் தனது மகனான பா. சுதாகரன் என்பவரை போராட்டத்தில் இணைத்துள்ளார்.

...உத்தமா தஇதழில்' கருத்துலகமும் வாழ்வியக்கமும்' என்ற கட்டுரையை எழுதிய பிரம்மஞானியின் 'மனிதனைத் தேடும் மனிதன்' என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் புதுவை இரத்தினதுரை, வவுனியா திலீபன், தொண்டையூர் துவாரகன், ப. தயாளன், க. பிரமதீஸ்வரி ஆகியோரின் கவிதைகளும் மு. அநாதரட்சகன், கோளாவிலூர் கிங்ஸ்லி, சுதாமதி ஆகியோரின் சிறுகதைகளும் சபா. ஜெயராசா, சாந்தி ஆகியோரின் கட்டுரைகளும் நாக.பத்மநாதனின் உருவகக்கதையும் இடம்பெற்றுள்ளன.

இது வெளிச்சத்தின் பத்தொன்பதாவது இதழாகும். அடுத்த 'வெளிச்சம்' இதழ் 'மாவீரர்நாள்' சிறப்பிதழாக வெளிவரவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 'குமாரி'
## இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

சுமார் 31 அரச ஊழியர்களை ஏற்றிக்கொண்டு ''குமாரி'' கப்பல் இன்று மாலை திருக்கோணமலைக்கு புறப்படவுள்ளது.

இக் கப்பலில் பயணம்செய்ய பதிவு செய்தவர்கள் இன்று 12.00மணிக்கு முன்னதாக சாப்பாடு மற்றும் தண்ணீர் என்பனவற்றுடன் பருத்தித் துறைக்கு சமுகம் தருமாறு யாழ். செயலக வட்டாரங்கள் கேட்டுக் கொண்டுள்ளன [பா]

## கலந்துரையாடல்

நல்லூர் பிரதேசத்தைச் சார்ந்த சகலதுறை வர்த்தகர்களுக்குமானகலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 3 மணிக்கு கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெற உள்ளது விடுதலைப்புலிகளின உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். அனைத்து வர்த்தகர்களும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்

புனர்வாழ்வு

நடைபெறவுள்ளதாகவும் விரும்பும் தனியார் நிறுவனங்கள் தாம் விரும்பினால் தமக்குத் தேவையானவற்றை கப்பல் மூலம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வாந்திபேதி

இடம்பெயர்ந்தோர் முகாமைச் சேர்ந்த ஐவரும், தொல்புரம் கிழக்கு, மேற்குக் பகுதியில் இருவரும் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும், நோய் தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிய வருகிறது. (41)

கதிரையில் இருந்து கொண்டிருப்பவர்களும் அறியமாட்டார்கள். அவர்களுக்குஇதுகுறித்து விளக்கமளிப்பது எனது வேலையல்ல'' என்றார் சிசில்.

கிளாலியில் இப்போதும் படகுகள் ஓடுகின்றனவே?

''எமக்கு தெரிந்த வரையில் அப்படியான ஒரு படகுசேவை கிளாலிக்கும் குஞ்சு பரந்தனுக்கும் இடையில் நடைபெறவில்லை. எமது இராணுவ புலனாய்வாளர்கள் எமக்கு கூறுவதைவிட கொழும்பிலுள்ள உங்களுக்கு ஏதும் அதிகமாக தெரிந்தால் நாட்டுப் பற்றாளர்கள் போல் அத் தகவல்களை எமக்கு தாருங்கள்''

பிரச்சினைகளைத்

மூர் பிரச்சினையை தீர்க்க முடியும் என நீங்கள் நம்புகின்றீர்களா? என கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தமிழர் பிரச்சினை உள்நாட்டு பிரச்சினை என்றநோக்கை நீங்கள்கொண்டுள்ளீர்கள் அப்படியானால் சிறிலங்கா அரசுக்கு பிரிட்டனும், இஸ்ரேலும் ஆயுதமும் பயிற்சியும் வழங்குவதை எவ்வாறு நீங்கள் நியாயப்படுத்துவீர்கள் என வினவப்பட்டபோது ''இதற்கு நான் பதிலளிக்க மாட்டேன் என்னிடம் இதற்கான பதில் இல்லை'' என்றார் அமைச்சர் தொண்டமான்.

கேள்வி: தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு ஏற்கமறுக்கிறது இந்நிலையில் தமிழர்களுக்கு ஏதாவது வழியுண்டா?

பதில்: இதற்கு என்னிடம் இப்போது பதில் இல்லை; எனினும் தமிழர்களிடையே ஒற்றுமை வேண்டும் தமிழர்கள் ஒற்றுமையாக நின்றாலே சிங்களவர்கள் தீர்வுபற்றி சிந்திப்பர் உன்னால் போராட முடியாவிட்டால் போராட்டத்திற்கு வேறு எந்த வழியாலும் ஆதரவளிக்கலாம்.

கேள்வி: சிங்கள அரசில் உள்ள தமிழ் அமைச்சர் நீங்கள் மூன்னைய அரசுகளின் தலைவர்கள் நாம் தமிழரின் கோரிக்கைகளை ஏற்கமுடியாதுள்ளது. ஏனெனில் சிங்கள மக்கள் தமிழீழம் என்ற யோச

இராணுவ

மேலும் இந்த அணியில் உள்ளவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையுடையவர்கள் என்றும் சுமார் 15பேரே இவ் அணியின் உறுப்பினர்கள் என்றும்இராணுவத்தளபதியே இவர்களது இலக்கு என்றும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அணியைச் சேர்ந்தவர்கள் கொட்டாஞ்சேனை, இரத்மலான, மட்டக்குளிய பகுதியில் மிக அண்மைக் காலத்தில் இருப்பதற்கான தடையங்கள் இருப்பதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(பா)

என்றார்.

இராணுவ பலத்தை அதிகரிப்பது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த இராணுவத்தளபதி, ''இராணுவத்துக்கு மேலதிக பலம் தேவை என்பது எனது கருத்து நான் இதை முன்னைய ஜனாதிபதிக்கு அறியத்தந்தபோதிலும் அதிக பலன் கிடைக்கவில்லை ஆனால் ஜனாதிபதி விஜேதுங்க சாதகமாக உள்ளார். ஜெனரல் வனசிங்காவும் மேலதிக துருப்புகளை கோரியுள்ளார்'' என்றார்.

னைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதேயாகும் என்று கூறுகின்றனரே?

பதில்: இது மிகப் பெரிய பொய், முடிவுகள் சாதாரண மக்களால் எடுக்கப்படுவது என்பது பெரும்பொய். சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்கு உரிமை வழங்க விரும்பவில்லை என்பதே உண்மை. நான் மலையக தமிழரின் பிரஜாவுரிமைக்காக 40 வருடங்களாக போராடியபோது இதையே சிங்களத் தலைவர்கள் என்னிடம் கூறினர். நான் அவர்களை ஒருபோதும் நம்பவில்லை ஒருநாள் அமைச்சரவைக் கூட்டத்தில் என்னை அழைத்து ஜனாதிபதி பிரேமதாசா மலையகத் தமிழருக்கு பிரஜாவுரிமை அளிக்க தாம் முன்வந்துள்ளதாகக் கூறினார். நான் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. எனினும் அவர் உறுதியளித்தபடியே செய்தார். இது முடிவுகளை பொதுமக்களல்ல அமைச்சரவையே எடுக்கின்றது என்பதை காட்டுகிறது. இதுவே உண்மை.

கேள்வி: இந்தியா இப்பிராந்தியத்தின் வல்லரசு. முன்பு ஒரு தடவை இந்தியா சிறிலங்காவினுள் இராணுவதலையீடு மூலம் சமாதானம் கொண்டு வர முயற்சித்தது. இந்தியாவை சமாதானம்ஏற்படுத்த தலையிடுமாறு கோருவது நல்லதில்லையா?

பதில்: இந்தியாவிற்கு பல உள்நாட்டு பிரச்சினைகள் உண்டு. தன் பிரச்சினையே அதுவால் தீர்க்க முடியாதுள்ளது. அப்படியிருக்க எமது பிரச்சினையை அதுவால் எப்படி தீர்க்க முடியும். நான் மூன்பு கூறியதுபோல் வெளியார் அமைதியைக் கொண்டு வர முடியாது. புலிகளும் அரசுமே சமரசம் செய்ய வேண்டும்.

கேள்வி: வடக்கும் கிழக்கும் ஒன்றாக இணைய வேண்டும் என தமிழர் கேட்கின்றனர். ஆனால் தெரிவுக்குழு அதை பிரிக்குமாறு கூறுகிறதே?

பதில்: வடக்கும் கிழக்கும் தமிழ் பிரதேசம் என 1977 அரசியல்யாப்பிலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.


மாளிகை), திரு. இ. சுப்பிரமணியம் (வதனி நகை மாளிகை), திரு. இ. பாக்கியராசா (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சு. துரைராசசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), திருமதி ச. ஈஸ்வரி, திருமதி த. சகுந்தலாதேவி (ஆசிரியை அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி], திருமதி பா. வசந்தகுமாரி, திருமதி சு. ரஞ்சனாதேவி (சங்கீத ஆசிரியை இந்துக் கல்லூரி சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்விகள் ச. சிவப்பிரியா, ச. மதிவதனி, து பிரியரஜனி, து. ஜெயப்பிரதீபா, சு. ஜான்சி, செல்வன்கள் ச. லதுர்ஜிகாந்த், ச. பிரதாப், து. திலீப்குமார், பா. அருள்பிரசாத், பா. ஜெயப்பிரசாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் இன்று புதன்கிழமை (20-10-1993) பி. ப. 2 மணியளவில் ''புவனபதி'' இல்லத்திலிருந்து கண்ணாடிப் பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

''புவனபதி''
பொற்தொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
இ. சண்முகலிங்கம்
(மகன்.)

(6330)

திருமதி

## சகாயமேரி தேவதாஸ்

திருமதி சகாயமேரி தேவதாஸ் அவர்கள் 16-10-93ல் காலமானார். அன்னார் திரு. அந்தோனிப்பிள்ளை தேவதாஸ் (சவூதி அரேபியா) அவர்களின் அன்பு மனைவியும், அனுதர்ஷினி, அனுதர்ஷன், பிரியதர்ஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிங்கராயர் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), நீற்றா தம்பதிகளின் அன்பு மகளும், அந்தோனிப்பிள்ளை காலஞ்சென்ற அருளம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், மேரி அஞ்சலீனா, அருள்நேசமேரி, யோசேப் அன்ரன் யேசுதாஸ் (டென்மார்க்), குயின்மேரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நேசராசா, மகேந்திரம், கிங்ஸ்லிரமேஷ், யூலி, அருள்தாஸ், மேரிராணி, விமலதாஸ் (ஜேர்மனி), யசிந்தா, செபரட்ணதாஸ் (யாழ். வர்த்தக வங்கி), அன்ரன் ஜீவதாஸ் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், சாந்தி, பாலசிங்கம், ரஞ்சினி, ஜோச் (சவூதி அரேபியா) லில்லி ஆகியோரின் சகலியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 20-10-93 காலை 10-30 மணிக்கு கரவெட்டி சேமக்காலையில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

சகாய மாதா கோவிலடி.
துன்னாலை,
பருத்தித்துறை.

தகவல்;
அ. செபரட்ணதாஸ்

(6331)

## திருமதிகாமாட்சிப்பிள்ளை நடராசா

கொல்லங்கலட்டி (தெல்லிப்பழை) யைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சுதுமலை அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி காமாட்சிப்பிள்ளை நடராசா 19-10-93 அன்று செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் தமிழ்ச்செல்வன், திருக்கேதீச்சரச்செல்வன் (ப நோ. கூ. ச. தெல்லிப்பழை) ஆகியோரின் தாயாரும் கோமளவல்லி, தவராணி, ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-10-93 இன்று புதன்கிழமை 2 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறுகேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந. தமிழ்ச்செல்வன் (மகன்)
ந. திருக்கேதீச்சரச்செல்வன் (மகன்)

(6332)

## தேவை

சகல வித மணிக்கூடுகளும் திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

ஆங்கில அறிவுடன்கூடிய பாடசாலை நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

நல்ல நிலையிலுள்ள கடிகாரங்கள் நியாய விலைக்கு வாங்கப்படும்.

**சில்வா வாச் வேக்ஸ்**
**10, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(6327)

## இதய அஞ்சலி
## அமரர் திரு. பொன். செல்வராசா

ஆசிரியர்

(யா/தம்பசிட்டி மெ.மி. பாடசாலை)

மலர்வு: 8.5.1940 உதிர்வு, 15.10.1993

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் திகழ்ந்த ஆசிரிய திலகம் பெருஞ்சோதியுட் கலந்துள்ளார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

அதிபர் – ஆசிரியர்,
மாணவர்கள்.

(சி/7741)



இப்புத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.